Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:


3 Marks

1. 1. விருப்பங்கள் எண்ணற்றவை.
   2. விருப்பங்கள் பழக்க வழக்கங்களாக மாறும்.
   3. விருப்பங்கள் நிறைவேறக் கூடியவை.
   4. விருப்பங்கள் மாற்றுப் பொருளால் நிறைவு பெறுபவை.
   5. விருப்பங்கள் போட்டியிடுபவை.
   6.விருப்பங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன.
   7. விருப்பங்கள் மீளத் தோன்றுபவை.
2. 1. ஒரு பண்டத்தின் எல்லா அலகுகளையும் நுகர்வதால் கிடைக்கும் பயன்பாட்டின் கூடுதலே **மொத்தப் பயன்பாடு** ஆகும்.
   2. கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை நுகர்வதால், மொத்தப் பயன்பாட்டில் ஏற்படும் கூடுதல் அல்லது மாற்றமே **இறுதிநிலைப் பயன்பாடு** ஆகும்.
   3. $MU_n = TU_N - TU_{n-1}$
   மொத்தப் பயன்பாட்டிற்கும் இறுதிநிலை பயன்பாட்டிற்கும் உள்ள தொடர்பு.


வ.எண்	இறுதிநிலைப் பயன்பாடு	மொத்தப் பயன்பாடு
1.	இறுதிநிலைப் பயன்பாடு குறையும்.	மொத்தப் பயன்பாடு அதிகரிக்கும்.
2.	இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியத்தை அடையும்.	மொத்தப் பயன்பாடு உச்ச நிலை அடையும்.
3.	இறுதிநிலைப் பயன்பாடு எதிர்மறையில் செல்லும்.	மொத்தப் பயன்பாடு குறையும்.

3. 1. நுகர்வோர் எச்சம் என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர்கள் தொன்மை பொருளியல் அறிஞர்கள் ஆவார்.
   2. காலப்போக்கில் ஜீல் டுபூட் மற்றும் ஜீவன்ஸ் 1884-ல் இக்கருத்தில் மாற்றங்களை ஏற்படுத்தினர்.
   3. ஆனால் நுகர்வோர் எச்சம் என்ற இக்கருத்தை சீர்படுத்தி வழங்கியவர் மார்ஷல் ஆவார்.
   இலக்கணம்:
   "ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட வாங்குவதே மேல் என முடிவு செய்து, கொடுக்க நினைத்த விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் எச்சம்" என்று மார்ஷல் கூறுகிறார்.
   எடுகோள்கள்:
   1. பயன்பாட்டை அளவிட முடியும்.
   2. பதிலீட்டு பண்டங்கள் இல்லை.
   3.நுகர்வோரின் சுவை, வருமானம் மற்றும் செயல்பாட்டில் மாற்றமில்லை.


   நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மைவிலை
4. **தேவை விரிவு:**
   குறைந்த விலையில் அதிக பொருட்களை வாங்குவது தேவை விரிவு ஆகும்.
   தேவை சுருக்கம்:
   அதிக விலையில் குறைந்த பொருட்களை வாங்குவது தேவை சுருக்கம் ஆகும்.
   தேவை விரிவும், தேவை சுருக்கமும்:
   விலையில் ஏற்படும் மாற்றத்தால் மட்டுமே தேவை அளவில் மாற்றம் ஏற்பட்டால் அதனை ' தேவை விரிவு ' மற்றும் 'தேவை சுருக்கம் 'என அழைக்கிறோம்
5. **சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள்:**
   1. சமநோக்கு வளைகோடு கீழ்நோக்கிய சரிவைக் கொண்டது.



   2. சநோக்கு வளைகோடுகள் தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்,
   3. சமநோக்கு வளைகோடு வெட்டிக்கொள்ளாது.



   4. சமநோக்குவளைகோடுகள் X அச்சையோ Y அச்சையோ தொடாது.



2 Marks

6. 1. பண்டங்கள் மற்றும் பணிகளை நுகரும்போது நுகர்வோருக்கு கிடைப்பதாக நுகர்வோர் கருதுவது.
   2. விருப்பத்தை நிறைவு செய்யும் ஆற்றல்.
7. விருப்பங்களில் வகைகள் மூன்று.
   1. இன்றியமையாத விருப்பம்.
   2. வசதிக்கான விருப்பம்.
   3. ஆடம்பரத்திற்கான விருப்பம்.
8. விலையில் ஏற்படும் பிரதிபலிப்பின் காரணமாக தேவை ஏற்படும் மாற்றம் விலைத் தேவை நெகிழ்ச்சியாகும்.
   1. முற்றிலும் நெகிழ்ச்சியுள்ள தேவை$(EP = \alpha)$
   2.முற்றிலும் நெகிழ்ச்சியுற்ற தேவை $(EP = 0)$
   3. மிகை தேவை நெகிழ்ச்சி $(EP > 1)$
   4. குறைவான நெகிழ்ச்சியுள்ள தேவை / குறைத்தேவை நெகிழ்ச்சி $(EP < 1)$
   5. அலகுத் தேவை நெகிழ்ச்சி $(EP = 1)$
9. ஒரு வளைகோட்டில் உள்ள இரு பண்டங்களின் அனைத்து கலவையும் நுகர்வோருக்கு சமஅளவு திருப்தியைத் தருமாயின் அது சமநோக்கு வளை கோடாகும்.
10. 1. கிஃபன் பண்டங்கள் அல்லது தாழ்ந்தரக பண்டங்கள் தேவை விதியின் விதி விலக்காகும்.
    2. தாழ்ந்தரக பண்டங்களின் விலை குறையும்போது ஏழைகள் அவற்றைக் குறைவாகவும் மேலும் விலை கூடும்போது அதிகம் வாங்குவர்.

QB 365 Study Material
QUESTION BANK 365